பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
மதுரைசாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

# கீழடி அகழாய்வு நிலையம் பார்வையிடல் அறிக்கை

**நாள் : 30.08.2023**

## கீழடி அகழாய்வு நிலையம்

30.08.2023, புதன்கிழமை அன்று 10.00 மணியளவில் கல்லூரி துணை முதல்வர் அருட்சகோதரி அமலிபுஷ்பம் அவர்களது ஒருங்கிணைப்பில் தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை பேராசிரியர்கள் மற்றும் 85 மாணவிகள் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த கீழடி அகழாய்வு நிலையத்தைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர். கீழடியில், 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நான்காம் கட்ட அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட பல்வேறு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

கி.மு.580 ஆம் ஆண்டு வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய ஆறு கரிம மாதிரிகள், தமிழ் பிராமி எழுத்து கொண்ட பானை ஓடுகள், விலங்குகளின் 70 எலும்புத் துண்டுகள், செங்கற்கள், நூல் நூற்கப் பயன்படுத்தப்பட்ட தக்களிகள், அகெட், கார்னீலியன் மணிகள், சிவப்பு வண்ண பானை ஓடுகள், இரும்பு ஆணிகள், கத்திகளின் பாகங்கள், சுடுமண்ணாலான உருவங்கள், பகடைக்காய், வட்டச்சில்லுகள், ஆட்டக்காய்கள் முதலான பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கீழடி அகழாய்வு குறித்த காணொளி காட்சியும் மாணவிகளுக்கு ஒளிபரப்பப்பட்டது. வைகை நதிக்கரையிலுள்ள கீழடி அகழாய்வின் மூலம் மக்களின் நகரமயமாதல் கி.மு.6ஆம் நூற்றாண்டிலே தொடங்கிவிட்டது என்பதை இவ்வகழ்வாய் காட்சிப்பொருட்களின் வழியாக மாணவிகள் அறிந்து கொண்டனர்.

## திருமலை நாயக்கர் மஹால்

பிற்பகல் 1.00 மணியளவில் மதுரையை ஆண்ட நாயக்க வம்சத்தின் மன்னர் திருமலை நாயக்கரால் 17 ஆம் நூற்றாண்டு கட்டப்பட்ட அரண்மனையைப் பார்வையிட மாணவிகள் அழைத்துப்பட்டனர். தென்னிந்தியாவிலே இந்தோ சரசனிக் பாணி மற்றும் திராவிட- இத்தாலி என அழைக்கப்படும் கட்டிடக்கலை பாணியில் அமைக்கப்பட்டிருந்தது. 248 பிரம்மாண்டமான பெரிய தூண்கள், வண்ணமயமான சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய மேற்கூரைகள், மன்னரின் அரியாசனம், அருங்காட்சியகம், தமிழ் ஏட்டுச் சுவடிகள் முதலானவை அவ்வரண்மனையில் காணப்பட்டன.

**தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆய்வாளர் திரு.ஆசைத்தம்பி அவர்கள்** இவ்வரண்மையின் வரலாறு குறித்தும் கட்டிடத்தின் அமைப்புக் குறித்தும் பின்வருமாறு மாணவிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். “சுன்னம் எனப்படும் நேர்த்தியான ஸ்டக்கோவில் ஃபோலியேட் செங்கல்களால் கட்டப்பட்டது என்றதும் பளபளப்பிற்கு முட்டையின் வெள்ளைக்கரு பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் இன்றளவும் பராமரிப்பு பணிக்கு இத்தகைய கலவை முறையே பின்பற்றப்பட்டு வருகின்றது என்றும் விரிவாக எடுத்துரைத்தார். மதுரை சுற்றுவட்டாரப் பகுதிகளில் அகழாய்வு செய்தபோது கிடைத்த பொருட்களும் அதிலும்

குறிப்பாக கோவலன் பொட்டல் எனும் பகுதியை ஆராய்ந்தபோது கிடைத்த தகவல்களும் இங்குள்ள அருட்காட்சியகத்தில் இடம் பெற்றிருக்கின்றன என பல்வேறு பயனள்ள வரலாற்றுக் குறிப்புகளையும் எடுத்துரைத்தார். இவ்வரண்மையின் அமைப்பு மற்றும் கட்டிடக்கலையின் சிறப்பு குறித்தும் அங்கு இடம்பெற்றுள்ள அருட்காட்சியகப் பொருட்கள் குறித்தும் மாணவிகள் அறிந்து கொள்ளும் வாய்ப்பாக அமைந்தது.

## கலைஞர் நூற்றாண்டு நூலகம்

மாலை 3.00 மணியளவில் மதுரையில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு மாணவிகள் அழைத்துச்செல்லப்பட்டனர். தமிழ் ஆய்வு நூல்கள், சிறுவர் நூல்கள், வரலாற்றுக் காப்பியங்கள், கலைஞர் கருணாநிதி அவர்களின் படைப்புகள், தமிழறிஞர்களின் புகழ்பெற்ற நூல்கள், ஓலைச்சுவடிகள் என பல்வேறு அரிதான நூல்கள் வரிசைப்பட்டிருந்ததோடு, கணினி முறையிலும் நூல்களை கண்டறிந்து படிக்கும் முறையிலான நவீன தொழில்நுட்ப நூலகமாகவும் இடம்பெற்றிருந்தன. மாணவிகள் தங்களது நுண்ணறிவை வளர்த்துக் கொள்ள பயன்படுத்திக்கொள்ளும் களமாக இந்நூலகம் அமைந்திருந்தது.

மாலை 6.00 மணியளவில் கல்லூரி வளாகம் வந்தடைந்த பின் மாணவிகளின் பின்னூட்டம் பெற்று அவரவர் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். “சங்ககாலத் தமிழ் சமூகத்தின் பண்பாட்டையும், ஆறாம் நூற்றாண்டிலே தமிழ் மக்கள் படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்றிருந்தனர் என்பதை கீழடி அகழாய்வு மூலம் அறிந்து கொண்டோம்” என்று மாணவிகள் பின்னூட்டம் வழங்கினர்.

# பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

மதுரைசாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

## கீழடி அகழாய்வு நிலையம் பார்வையிடல் அறிக்கை

நாள் : 30.08.2023












